*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

***No. LGS/PRO/2021*** ***04 மே, 2021***

## பத்திரிகை செய்தி

புதுச்சேரியில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தனியார் சமூகப் பொறுப்புணர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழில் நிறுவனங்கள் பங்கெடுப்பதை அரசு ஊக்குவித்து வருகிறது. அதனடிப்படையில் பல்வேறு தனியார் தொழில் நிறுவனங்கள் முகக் கவசம், கிருமிநாசினி, வெண்டிலோட்டர் கருவிகள், மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை சுகாதாரத்துறைக்கு வழங்கி வருகின்றன.

இன்று(04-05-2021) தொழில் மற்றும் வணிகத்துறையின் மூலமாக, இந்தியத் தொழில் கூட்டமைப்பு புதுச்சேரி கிளையுடன் இணைந்து இந்துஸ்தான் யூனிலீவர் நிறுவனம் பத்து லட்சம் கிருமிநாசினி பாக்கெட்டுகளும், ஸ்னாம் அலாய்ஸ் நிறுவனம் ஒன்றரை லட்சம் முகக்கவசங்களும் சுகாதாரத்துறைக்கு வழங்கின. துணைநிலை ஆளுநர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில், மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் முன்னிலையில் சுகாதாரத்துறை செயலர் திரு அருண் அவர்களிடம் இவை ஒப்படைக்கப்பட்டன.

அவ்வமையம், துணைநிலை ஆளுநரின் ஆலோசகர்கள் டாக்டர் C. சந்திரமௌலி, டாக்டர் A. P மகேஸ்வரி, உள்ளாட்சி மற்றும் தொழில்துறைச் செயலர் திரு வல்லவன், துணைநிலை ஆளுநரின் செயலர் திரு அபிஜித் விஜய் சௌதிரி, சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் மோகன் குமார், மாநில சுகாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமலு இந்தியத் தொழில் கூட்டமைப்பு புதுச்சேரி கிளையின் சார்பாக அதன் தலைவர் திரு சீனுவாஸ் சத்தீஷ் ஆகியோர் உடனிருந்தனர். எச்.யு.எல் மற்றும் ஸ்னாம் அலாய்ஸ் நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.